கல்விப் பொதுத் தராதரப் பத்திர )உயர் தரப் பரீட்சை 2020
General Certificate of Education (Adv.Level) Examination 2020

**MODEL 02**

**கணக்கீடு 1**
**Accounting 1**

**33** | **T** | **1**

**இரண்டு மணித்தியாலம்**
**Two Hours**

**அறிவுறுத்தல்கள் :**

01. **எல்லா** வினாக்களுக்கும் இவ் வினாத் தாளிலேயே விடை எழுதுக.
02. ஒவ்வொரு வினாவிற்கும் **2** புள்ளிகள் வழங்கப்படும்.
03. **1 தொடக்கம் 30** வரையான வினாக்களுக்கு புள்ளிக் கோட்டில் விடையின் சரியான **இலக்கத்தினை** இடுக.
04. **31 தொடக்கம் 50** வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடையினை சுருக்கமாக புள்ளிக் கொட்டில் எழுதுக.
05. **சுட்டெண்ணை தெளிவாக எழுதுக.**

பரீட்சகரின் உபயோகத்திற்கு

| வினாத்தாள் 1 | |
|---|---|
| வினா இலக்கம் | புள்ளிகள் |
| 1 – 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |
| முதலாவது பரீட்சகர் | |
| இரண்டாவது பரீட்சகர் | |

01. பின்வருவனவற்றில் நிதிக் கணக்கீட்டின் பிரதான தொழிற்பாடாக காணப்படுவது?
   1. முகாமையாளர் தீர்மானங்களை மேற்கொள்ள தேவையான கணக்கீட்டு தகவலை வழங்குதல்.
   2. நிதி சார் கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், வகைப்படுத்தல், பகுப்பாய்வு செய்தல்.
   3. வெளியக தரப்பினர்கள் தீர்மானம் எடுப்பதற்கு தேவையான பொருளாதார தகவல்களை வழங்குதல்.
   4. முதலீட்டு தீர்மானங்களை மேற்கொள்ள தேவையான நிதி சார் தகவல்களை வழங்குதல்.
   5. அக்கறை செலுத்தும் பிரவினர்கள் தீர்மானம் எடுப்பதற்கு தேவையான பொருளாதார தகவல்களை வழங்குதல்.

(…….)

02. பின்வரும் கணக்கீட்டுச் சூழல்களுக்குப் பொருத்தமான கணக்கீட்டுச் சூழல் காரணிகளை தொடர்புபடுத்துக.

| கணக்கீட்டுச் சூழல் | கணக்கீட்டுச் சூழல் காரணி |
|---|---|
| 1. பொருளாதாரச் சூழல்9 | A. கணக்கீட்டு கணக்காய்வு நியமச் சட்டம் |
| 2. தொழில் சார்நுட்பச் சூழல் | B. வரிக் கொள்கை |
| 3. தொழில்நுட்பச் சூழல் | C. மனப்பாங்குகள் |
| 4. சட்டச் சூழல் | D. உபகரணங்களின் பயன்பாடு |
| 5. சமூக கலாசாரச் சூழல் | E. கணக்கீட்டு நியமங்கள் |

1). A,B,C,D,E    2). B,E,D,C,A    3) B,E,D,A,C    4). A,C,D,B,E    5). B,A,D,E,C

(………)

03. சுவேதிகா வணிகத்தின் 2019.01.01 இல் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களில் இரண்டு கீழே தரப்பட்டுள்ளன.

கடன் கொள்வனவு ரூபா 100 000

கொள்வனவுத் திரும்பல் ரூபா 10 000

மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் தாக்கத்தை சரியாகக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.

01. சொத்து அதிகரித்தல் ரூ. 90 000 – பொறுப்பு குறைவடைதல் ரூ. 90 000

02. சொத்து அதிகரித்தல் ரூ. 90 000 – பொறுப்பு அதிகரித்தல் ரூ. 90 000

03. சொத்து அதிகரித்தல் ரூ. 100 000 – பொறுப்பு அதிகரித்தல் ரூ. 100 000

04. சொத்து குறைவடைதல் ரூ. 100 000 – பொறுப்பு அதிகரித்தல் ரூ. 100 000

05. உரிமை அதிகரித்தல் ரூ. 100 000 – சொத்து அதிகரித்தல் ரூ. 100 000

(……..)

04. பின்வருவன நிதிக் கணக்கீட்டின் தொழிற்பாடுகள் ஆகும்.

A. மூலப் பதிவேடுகளில் பதிவு செய்தல்

B. கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறுதல்

C. பரீட்சை மீதி தயாரித்தல்

D. பேரேடுகளில் பதிவு செய்தல்

E. மூல ஆவணங்கள் தயாரித்தல்

மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் சரியான ஒழுங்கு வரிசை எது?

01. E,B,A,D,C 03. A,B,E,D,C 05. B,E,A,D,C

02. E,A,B,D,C 04. A,D,B,E,C

**பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 05, 06 வினாக்களுக்கு விடை தருக.**

A. ஒப்பிடக் கூடியது

B. பொருத்தப்பாடானது

C. விளங்கிக் கொள்ளக் கூடியது

D. கொள்கை மாறாமை

E. வரலாற்றுக்கிரயம்

F. முன்னெச்சரிக்கை

05. மேலே தரப்பட்டவற்றில் கணக்கீட்டுத் தகவல்களின் பண்புசார் குணாதிசயங்களாகக் கருதப்படுபவை எவை?

01. A,B,F 02. B,D,E 03. A,B,C 04. D,E,F 05. C,D,E

(…….)

06. மேலே தரப்பட்டவற்றில் கணக்கீட்டு எண்ணக்கருக்களாக காணப்படுபவை எவை?

1). A,B,C 02. D,E,F 03. B,C,E 04. C,E,F 05. B.C,E

(…….)

07. வரையறுக்கப்பட்ட வெல்கம் வணிகத்தின் கொள்வனவுப் பட்டியலிலிருந்து (இன்வொய்ஸ்) பிரித்தெடுக்கப்பட்ட பகுதியொன்று கீழே காணப்படுகின்றன.

| திகதி | வழங்குநர் | பெறுமதி (ரூ 000) |
|---|---|---|
| 2019.03.05 | உஸ்வெத்த கம்பனி<br>கழிவு 10% | 2 000<br>(200) |
| | | 1 800 |
| நிபந்தனை : ஒரு மாத்தினுள் பணம் கொடுப்பனவு செய்யப்படும் போது 10% கழிவு கிடைக்கும் | | |

இக் கொடுக்கல் வாங்கலுக்குரிய பணம் 2019.03.30 இல் கொடுப்பனவு செய்யப்பட்டது. கழிவினைப் பதிவு செய்வதற்குரிய சரியான இரட்டைப் பதிவு எது?

| | | வரவு (ரூபா) | | செலவு (ரூபா) |
|---|---|---|---|---|
| 1. | கிடைத்த கழிவுக்கணக்கு | 180 000 | கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 180 000 |
| 2. | கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 180 000 | கிடைத்த கழிவுக்கணக்கு | 180 000 |
| 3. | கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 200 000 | கிடைத்த கழிவுக் கணக்கு | 200 000 |
| 4. | கொடுத்த கழிவுக் கணக்கு | 380 000 | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 380 000 |
| 5. | கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 380 000 | கிடைத்த கழிவுக் கணக்கு | 380 000 |

(…….)

08. சுதேஸ் வணிகம் தனது சில்லறைச் செலவுகளுக்காக வசக்கட்டு முறையிலான சில்லறைக் காசுக் கொடுப்பனவு முறையினைப் பயன்படுத்துகின்றது. மாதாந்த சில்லறைக் காசு வசக்கட்டின் பெறுமதி ரூபா 5 000 ஆகும். வசக்கட்டானது மாதத்தின் தொடக்கத் திகதியில் மீள் நிரப்பப்பட்டுவருவதுடன் 2019 ஜனவரி, பெப்ரவரி இரண்டு மாதங்களுக்குமாக வெவ்வேறாக பிரதம காசாளரினால் சில்லறைக் காசாளருக்கு மீள் நிரப்பிய மொத்தத் தொகை ரூபா 7 200 ஆகும். 2019.02.01 இல் மீள் நிரம்பலுக்கு முன்னர் சில்லறைக் காசாளரின் கையில் இருந்த மீதி ரூபா 800 ஆகும்.

2019.01.01இல் மீள்நிரம்பலுக்கு முன்னர் சில்லறைக் காசாளரிடம் காணப்பட்ட மீதியானது

1) ரூபா 1 800 ஆகும்.
2) ரூபா 2 400 ஆகும்.
3) ரூபா 4 400 ஆகும்.
4) ரூபா 2 000 ஆகும்.
5) ரூபா 3 000 ஆகும்.

(……..)

09. சிவன் வணிகத்தின் 2019.03.31 இல் தயாரித்த பரீட்சை மீதியின் மொத்தமானது சமப்படாமையினால் வித்தியாசம் தொங்கல் கணக்கில் பதிவு செய்யப்பட்டு, வரைபு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு தேறிய இலாபமாக ரூபா 300 000 கணிப்பிடப்பட்டது. பின்னர் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின்போது பின்வரும் வழுக்களும் விடுபடுதல்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

- உட்திரும்பல் ரூபா 20 000 கடன்படுநர் கட்டுப்பாட்டுக் கணக்கில் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தது.
- வாடகைக் கொடுப்பனவு ரூபா 8 000 வாடகைக் கணக்கு காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு இரண்டிலும் செலவு வைக்கப்பட்டிருந்தது.
- பதிவழிக்கப்பட்ட அறவிடமுடியாக்கடன் ரூபா 5 000 கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சரியான தேறிய இலாபத்தை காட்டும் விடை எது?

1). ரூ. 264 000 2). ரூ. 280 000 3). ரூ. 292 000 4). ரூ. 295 000 5). ரூ. 305 000

(……..)

10. டேவிட் வணிகத்தின் 2019.03.31 இல் கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூபா 100 000 ஆகக் காணப்பட்டது. அத்திகதியில் கடன்கொடுநர் மீதிப்பட்டியலின் மொத்தமானது கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கன் மீதியுடன் பின்வரும் காரணங்களினால் சமப்படவில்லை.

- காசோலையொன்று மறுக்கப்பட்டமை காரணமாக நிறுவனத்திற்கு கிடைத்த ரூபா 5 000 கழிவினை இரத்துச் செய்வதற்கான பதிவு கடன் கொடுநர் கணக்கில் வரவுவைக்கப்பட்டிருந்தது.
- கிடைத்த கழிவு ரூபா 15 000 கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கில் ரூபா 1 500 என வரவு வைக்கப்பட்டிருந்தது.
- ரூபா 10 000 கொள்வனவுப் பட்டியலொன்று குறித்த கடன்கொடுநர் கணக்கில் ரூபா 1 000 எனப்பதிவு செய்யப்பட்டிருந்தது.

2019.03.31 இல் நிதி நிலைமைக் கூற்றில் பொறுப்பாக வெளிப்படுத்தப்படும் கடன் கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி எது?

1) ரூ. 67 500 2) ரூ. 86 500 3) ரூ. 76 500 4) ரூ. 67 500 5) ரூ. 113 500

(……)

11. வணிகம் ஒன்றில் பயன்பாட்டிற்காக கொள்வனவு செய்யப்பட்ட உபகரணம் ஒன்றின் கிரயம் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலப் பகுதியில் பயன்படுத்தக் கூடியதாக காணப்பட்ட போதிலும் முழுமையான தொகையும் கொள்வனவு வருடத்தின் வருமானக் கூற்றில் செலவொன்றாக வெளிப்படுத்தப்பட்டது. இதற்குப் பொருத்தப்பான கணக்கீட்டு எண்ணக்கரு எது?

1. முக்கியத்துவ எண்ணக்கரு
2. தொடர்ந்து செயற்படும் அமைப்பு எண்ணக்கரு
3. தோற்றத்தலும் பார்க்க கருத்து முக்கியத்துவ எண்ணக்கரு
4. இணைதல் எண்ணக்கரு
5. பண அளவீட்டு எண்ணக்கரு

(…….)

12. பின்வரும் கணக்கீட்டுச் சந்தர்ப்பங்கள் தரப்பட்டுள்ளன.

A. இயந்திரம் ஒன்றின் நடைமுறைவிலைப் பெறுமதி வெளிப்படுத்தப்படுதல்

B. சரக்கிருப்புக்கள் FIFO முறையில் மதிப்பிடப்படுதல்

C. சரக்கிருப்புக்கள் நடைமுறை சந்தை விலையில் மதிப்பிடப்படுதல்

D. நிலத்தின் பெறுமதி கொள்வனவு விலையில் மதிப்பிடப்படுதல்

கொடுக்கல் வாங்கல்களையும் நிகழ்வுகளையும் அறிக்கைப்படுத்தும் போது வரலாற்றுக் கிரய எண்ணக்கருவை பின்பற்றிச் செல்லும் சந்தர்ப்பமொன்றாகக் இனங்காணக் கூடியது/கூடியவை

1. A, C 2) B,D 3) A,B 4) B,C 5) A,D

(……)

13. திருமண மண்டபம் ஒன்றினை வாடகைக்கு வழங்கி வருமானம் உழைக்கும் நிமால் வணிகத்தின் தகவல்கள் வருமாறு.

| | **2019.03.31 இல் (ரூபா)** | **2018.04.01 இல் (ரூபா)** |
|---|---|---|
| முற்பண வாடகை வருமானம் | 220 000 | 340 000 |
| வருமதி வாடகை வருமானம் | 520 000 | 480 000 |

2019.03.31 இல் முடிவடையும் வருடத்தினுள் மொத்த பெற்ற வாடகை ரூபா 1 500 000 ஆகும். 2019.03.31 இல் முடிவடையும் வருடத்திற்குரிய வாடகை வருமானத்தின் பெறுமதி

1) ரூபா 1160 000 ஆகும்.
2) ரூபா 1340 000 ஆகும்
3) ரூபா 1360 000 ஆகும்
4) ரூபா 1460 000 ஆகும்
5) ரூபா 1660 000 ஆகும்

(…….)

14. வரையறுக்கப்பட்ட பிரியா கம்பனியின் 2019.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்குரிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | ரூ. 000 |
|---|---|
| விற்பனைகள் | 7 700 |
| விற்பனைத் திரும்பல் | 500 |
| 2018.04.01இல் கடன்பட்டோர் மீதி | 650 |
| 2019.03.31இல் கடன்பட்டோர் மீதி | 750 |

விற்பனைகள் அனைத்தும் கிரயத்தில் 20% இலாபத்தில் இடம்பெற்றுள்ளன. 60% விற்பனைகள் கடனுக்கும் மிகுதி காசுக்கும் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் ரூ. 1 200 000 ஆனது 2019 ஏப்பரல் மாதத்தில் மேற்கொள்ளப்படவுள்ள விற்பனைக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட முற்பணத் தொகையும் விற்பனைகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

2019.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்குரிய மொத்த இலாபமும் கடன்பட்டோரிடம் பெற்ற காசும் முறையே

1) ரூ 1000 000, ரூ 5900 000 2) ரூ 1000 000, ரூ 7100 000 3) ரூ 2400 000, ரூ 5900 000
4) ரூ 2400 000, ரூ 7100 000 5) ரூ 2600 000, ரூ 7800 000

(…….)

15. விஸ்டம் பொதுக் கம்பனி பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்கின்றது. 31.03.2019 இல் நிதியாண்டிற்குரிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | ரூ. 000 |
|---|---|
| ஆரம்ப மூலப் பொருள் இருப்பு | 600 |
| இறுதி மூலப்பொருள் இருப்பு | 300 |
| மூலப்பொருள் கொள்வனவு | 1 500 |
| தீர்வைவரியும், உட்சுமைக்கூலியும் | 200 |
| இறுதிக் குறைவேலை உற்பத்திக் கிரயத்தில் | 100 |
| நேர் கூலி | 1 000 |

உற்பத்தி மேந்தலைகள் மூலக் கிரயத்தின் 40%

2019.03.31 ல் முடிவடைந்த வருடத்தின் உற்பத்திக் கிரயமும், உற்பத்தி மேந்தலையும் முறையே

1) ரூபா 3000 000, ரூபா 920 000
2) ரூபா 3000 000, ரூபா 1200 000
3) ரூபா 3320 000, ரூபா 920 000
4) ரூபா 4100 000, ரூபா 1200 000
5) ரூபா 4200 000, ரூபா 1200 000

(…….)

16. இலாப நோக்கமற்ற வணிகங்கள் தொடர்பிலான பின்வரும் கூற்றுக்களுள் எது/எவை பிழையானது/ பிழையானவை?

1. இவ் வணிகத்தில் பெற்றுக்கொள்ளப்படும் ஆயுள் அங்கத்துவ தொகை நிலையான தொகையாக கணக்கொன்றில் பேணப்படும்.
2. வருமானக் கூற்றில் இனங்காணப்படும் வருமான மிகை தவிர்ந்த வேறு தொகைகளும் திரண்ட நிதிக்கு நேரடியாக பங்களிப்புச் செய்கின்றன.
3. இவ்வணிகத்தில் நிலுவை அங்கத்துவத் தொகை சொத்தாக இனங்காணப்படும்
4. இவ்வகையான வணிகங்கள் தமது விசேட தேவைகளுக்காக வேறு நிதிகளைப் பேணிச்செல்ல முடியும்.
5. இவ் வணிகங்களின் தேறிய வருமானங்கள் கொள்ளல் கொடுத்தல் கணக்கின் மூலம் இனங்காணப்படும்.

1) A,B 2) A,B,E 3) C,D 4) C,D,E 5) B,C,D

(…….)

**பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 17,18,19,20 ஆகிய வினாக்களுக்கு விடையளிக்குக.**

மது, சுது, இருவரும் முறையே ரூபா 2000 000 வீதம் மூலதனத்தை ஈடுபடுத்தி பங்குடமை வியாபாரமொன்றை 01.04.2017இல் ஆரம்பித்தனர். இத் திகதியில் பங்காளர்களிடையே ஒப்பந்தம் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை. 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்தின் பங்குடமை 600 000 இலாபத்தை உழைத்ததுடன் ஒவ்வொரு பங்காளரும் தமது இலாபம் பங்கிலிருந்து ரூபா 100 000 வீதம் காசாக எடுத்துக் கொண்டனர்.

01.04.2018 இல் விது என்பவரை புதிய பங்காளராக ரூ. 2000 000 மூலதனப் பங்களிப்புடன் சேர்த்துக் கொள்ளப்பட்டதுடன், சுது பங்குடமையின் மேலதிக செயற்பாடுகளுக்காக ரூ. 1 000 000 கடனையும் வழங்கினார். இத் திகதியில் இருந்து பங்காளர்கள் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கைக்கு அமைய 31.03.2019 இல் முடிவடைந்த ஆண்டில் உழைக்கப்பட்ட இலாப நட்டங்கள் பகிரப்பட்டதன் பின்னர் பங்காளர் நடைமுறைக் கணக்கு வருமாறு.

பங்காளர் நடைமுறைக் கணக்கு                    ரூபா 000

| விபரம் | மது | சுது | விது | விபரம் | மது | சுது | விது |
|---|---|---|---|---|---|---|---|
| பற்று (G) | 300 | 200 | 200 | வாடகை (A) | 300 | - | - |
| மீதி செ.து | 840 | 690 | 420 | விளம்பரம் (B) | - | - | 100 |
| | | | | கடன் வட்டி (C) | - | 50 | - |
| | | | | சம்பளம் (D) | 400 | 400 | 200 |
| | | | | மூலதன வட்டி (E) | 200 | 200 | 200 |
| | | | | இலாபம் (F) | 240 | 240 | 120 |
| | 1140 | 890 | 620 | | 1140 | 890 | 620 |

17. மேலே தரப்பட்ட நடைமுறைக் கணக்கில் காட்டப்பட்ட விடயங்களில் பங்குடமைச் சட்டத்தின் ஏற்பாடுகளும், பங்குடமை ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளும் எவை?

| | சட்டத்தின் ஏற்பாடுகள் | ஒப்பந்தத்தின் ஏற்பாடுகள் |
|---|---|---|
| 1) | A,B,C,F | C,E,G |
| 2) | D,E,F | A,B,C,G |
| 3) | A,B,G | C,D,E,F |
| 4). | C,D,E,F | A,B,G |
| 5) | A,B,C,G | D,E,F |

(……)

18. 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்தில் பங்குடமை உழைத்த இலாபம் எவ்வளவு?
   1) ரூபா 1950 000   2) ரூபா 2200 000   3) ரூபா 2650 000
   4) ரூபா 2800 000   5) ரூபா 3450 000

(…….)

19. பங்காளர் ஈடுபடுத்திய மூலதனம் நிலையாக பேணப்படுமாயின் 31.03.2019இல் உள்ளவாறு காணப்பட வேண்டிய நடைமுறைக் கணக்கு மீதி?
   1) ரூபா 1550 000   2) ரூபா 2250 000   3) ரூபா 2500 000
   4) ரூபா 2800 000   5) ரூபா 4050 000

(…….)

20. 31.03.2019 இல் உள்ளவாறு பங்குடமையின் மொத்த உரிமையாண்மை எவ்வளவு?
   1) ரூபா 7950 000   2) ரூபா 8250 000   3) ரூபா 8800 000
   4) ரூபா 9250 000   5) ரூபா 9450 000

(…….)

21. LKAS 07 (காசுப்பாய்ச்சல் கூற்று) நியமத்திற்கேற்ப செயற்பாட்டு நடவடிக்கைகள், முதலீட்டு நடவடிக்கைகள், நிதி நடவடிக்கைள் என்பவற்றிற்குரிய உருப்படிகளை முறையாகக் காட்டும் விடை எது?
   1. கடன்கொடுத்தோருக்கு காசு செலுத்துதல், பங்குகளைக் கொள்வனவு செய்தல், வங்கிக் கடன்பெறல்.
   2. கடன்பட்டோரிடமிருந்து காசு கிடைத்தல், பங்குகளைக் கொள்வனவு செய்தல், பங்கிலாபம் கிடைத்தல்.
   3. வட்டி வருமானம் கிடைத்தல், காசு விற்பனை, வங்கியிலிருந்து கடன் எடுத்தல்.
   4. காசுக்கொள்வனவு ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் விற்பனை, கடன் விற்பனை
   5. செயற்பாட்டுச் செலவுகளைச் செலுத்துதல், வங்கிக் கட்டளைச் செலுத்துதல் ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு

(…….)

22. LKAS 8 (கணக்கீட்டு கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றங்கள் மற்றும் வழுக்கல்) நியமத்திற்கேற்ப விடையளிக்க.

A – இயந்திரம் ஒன்றின் பயன்பாட்டு ஆயட்காலம் 10 வருடங்களிலிருந்து 12 வருடங்களாக மதிப்பிடப்பட்டது

B - இருப்பின் கிரயம் ரூபா 800 000 ஆகக் காணப்பட்ட போதிலும் அதன் தேறிய நிகரப் பெறுமதி ரூபா 500 000 என மதிப்பிடப்பட்டது

C – ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களைத் தேய்விடும் முறை நேர் கோட்டு முறையிலிருந்து ஒடுங்குபாக மீதி முறைக்கு மாற்றப்பட்டது.

1) A, B என்பன மதிப்பீட்டு மாற்றங்களாக கருதப்பட்டு கடந்த ஆண்டு, நடைமுறை ஆண்டு நிதிக் கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்படும்.
2) A,B,C என்பன மதிப்பீட்டு மாற்றங்களாக கருதப்பட்டு நடைமுறையாண்டு, எதிர்வரும் ஆண்டுகளுக்கான நிதிக் கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்படும்.
3) A,B என்பன மதிப்பீட்டு மாற்றங்களாகவும், C கொள்கை மாற்றமாகவும் கருதப்பட்டு நடைமுறையாண்டு, எதிர்வரும் ஆண்டுகளுக்கான நிதிக் கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்படும்.
4) A,B என்பன மதிப்பீட்டு மாற்றங்களாகவும், C கொள்கை மாற்றமாகவும் கருதப்பட்டு கடந்த ஆண்டு நடைமுறையாண்டு நிதிக் கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்படும்.
5) A,B,C என்பன மதிப்பீட்டு மாற்றங்களாக கருதப்பட்டு கடந்த ஆண்டு, நடைமுறையாண்டு நிதிக் கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்படும்.

(…….)

23. வரையறுக்கப்பட்ட கபில்தேவ் பொதுக் கம்பனியின் 2019.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் 2019.06.15 இல் அங்கீகரிக்கப்பட்டது. 2019.03.31 தொடக்கம் 2019.06.15 வரையான காலப்பகுதியினுள்பின்வரும் நிகழ்வுகள் கம்பனியில் இடம்பெற்றிருந்தன.

1. 2019.05.10 இல் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக 2019.03.31 நிறுவனத்தில் காணப்பட்ட முக்கியமான இயந்திரமொன்று அழிவுக்குட்பட்டு ரூபா 500 000 நட்டம் ஏற்பட்டது.
2. 2019.02.28 இல் இடம்பெற்ற கடன் விற்பனையின் காரணமாக உருவான ரூபா 50 000 கடன்பட்டோர் 2019.04.05 இல் முறிவடைந்தவராக நீதிமன்றம் அறிவித்தது.
3. ஊழியர் ஒருவரினால் 2019.03.20 இல் நிறுவனத்திற்கு எதிராக வைக்கப்படட வழக்கு தொடர்பில் நட்டஈடாக ரூபா 100 000 வை நிறுவனம் செலுத்த வேண்டும் என 2019.04.20 இல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
4. 2019.03.31 இல் முடிவடையும் வருடத்திற்கு சாதாரண பங்காளர்களுக்கு ரூபா 400 000 வை இறுதிப்பங்கிலாபமாக 2019.06.10 இல் பிரகடனப்படுத்தியது.

LKAS 10 (அறிக்கைப்படுத்தப்பட்ட நிதியாண்டுக்குப் பின்னரான நிகழ்வுகள்) நியமத்திற்கேற்ப 2019.03.31 இல் முடிவடையும் வருடத்திற்கான நிதிக்கூற்றுக்களில் சீராக்க வேண்டிய நிகழ்வுகள்/நிகழ்வு எது?

1) A மட்டும்
2) B மட்டும்
3) B யும் C யும் மட்டும்
4) A யும் B யும் மட்டும்
5) C யும் D யும் மட்டும்

(…….)

**பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 24,25,26 ஆகிய வினாக்களுக்கு விடையளிக்க.**

வரையறுக்கப்பட்ட தனுசன் பொதுக் கம்பனியொன்றின் நிதிக்கூற்றுக்களிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்ட தகவல்களில் சில பின்வருமாறு

| | **2019.03.31 ஆம் திகதி (ரூபா 000)** | **2018.03.31 ஆம்திகதி (ரூபா 000)** |
|---|---|---|
| கூறப்பட்ட மூலதனம் சாதாரண பங்குகள் | 8 000 | 6 000 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் - காணி | 1 000 | |
| பொது ஒதுக்கம் | 1 800 | 1 400 |
| நிறுத்தி வைத்த உழைப்பு | 5 300 | 2 500 |

பிற பொருத்தமான தகவல்கள்

1. 2019.03.31 இல் முடிவடையும் வருடத்திற்கான வருமான வரி ரூபா 800 000 ஆக மதிப்பிடப்பட்டது. 2018.03.31இல் காணப்பட்ட வருமான வரிப் பொறுப்பு ரூபா 500 000 ஆனது ரூபா 350 000 ஆக இவ் வருடத்தில் இனங்கிக் கொள்ளப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.
2. 2019.03.31 இல் முடிவடையும் வருடத்திற்காகச் செலுத்திய பங்கிலாபம் ரூபா 800 000 ஆகக் காணப்பட்டதுடன் வருடத்தினுள் நிறுத்தி வைத்த உழைப்பிலிருந்து பொது ஒதுக்கத்திற்கு ஒரு தொகை மாற்றப்பட்டுள்ளது.
3. கம்பனிக்கு சொந்தமான காணி 2019.03.31 இல் மீண்டும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. முன்னைய வருடத்தில் மீள்மதிப்பீட்டின் போது ரூபா 1000 000 குறைவொன்று அறிக்கைப்படுத்தப்பட்டிருந்தது. இவ் வருடத்திற்கான இது தொடர்பான சீராக்கங்கள் அனைத்தும் சரியாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.
4. இவ் வருடத்திற்கான பெறுமானத் தேய்வு ரூபா 500 000 ஆகவும், தொழிற்படு மூலதனத்தில் ஏற்பட்ட குறைவு ரூபா 600 000 ஆகும்

24. 2019.03.31 இல் முடிவடையும் வருடத்திற்கான இக்கம்பனியின் வரிக்கு முன்னரான இலாபம் எவ்வளவு?

1) ரூபா 4 150 000    3) ரூபா 4 500 000    5) ரூபா 4 650 000
2) ரூபா 4 750 000    4) ரூபா 4 800 000

(…….)

25. 2019.03.31 இல் முடிவடையும் வருடத்திற்கான கம்பனியின் ஏனைய முற்றுமடங்கிய வருமானம் எவ்வளவு?

1) ரூபா 1 000 000    3) ரூபா 2 000 000    5) ரூபா 5 650 000
2) ரூபா 5 500 000    4) ரூபா 5 800 000

(…….)

26. 2019.03.31இல் முடிவடைந்த வருடத்திற்கான செயற்பாட்டு நடவடிக்கை மூலமான தேறிய காசுப்பாய்ச்சல் எவ்வளவு?

1) ரூபா 4 650 000    3) ரூபா 4 800 000    5) ரூபா 5 750 000
2) ரூபா 5 150 000    4) ரூபா 5 400 000

(…….)

27. வரையறுத்த சன்முகம் பொதுக் கம்பனியின் கம்பனியின் 2019.03.31இல் முடிவடைந்த வருடம் தொடர்பான தகவல்கள் வருமாறு

கடன் விற்பனை ரூபா 600 000

சரக்கிருப்பு புரள்வு விகிதம் 6 தடவைகள்

கடன்பட்டோர் சேகரிப்புக் காலம் 36 நாட்கள்

வருடமொன்றில் நிறுவனம் தொழிற்படும் நாட்கள் 360

மொத்த இலாப வீதம் 25%

கம்பனியின் சராசரி கையிருப்பும், சராசரி கடன்பட்டோர் தொகையும் முறையே எவை?

1) ரூபா 75 000, ரூபா 60 000　　2) ரூபா 75 000, ரூபா 200 000

3) ரூபா 60 000, ரூபா 100 000　　4) ரூபா 30 000, ரூபா 100 000

5) ரூபா 7 500, ரூபா 10 000

(……)

28. வணிகமொன்று பொருள் கட்டுப்பாடு தொடர்பில் பயன்படுத்துகின்ற ஆவணங்கள் தொடர்பிலான கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A – அனுப்படும் பொருள் தொடர்பான விபரங்களை உள்ளடக்கி வழங்குனரால் அனுப்படும் பத்திரம் ஒப்படைப்புப் பத்திரம் ஆகும்.

B – வழங்குனரைத் தெரிவு செய்வதற்காக களஞ்சியத்தினால் அனுப்படுவது விலைவிசாரனைக் கடிதம் ஆகும்

C – உற்பத்திப்பிரிவினால் மூலப்பொருட்களைக் கேட்டு களஞ்சியச்சாலைக்கு வழங்கப்படுகின்ற ஆவணம் பொருள் வேண்டுகோள்பத்திரமாகும்.

D – களஞ்சியச்சாலையினால் பொருட்களை கொள்வனவு செய்யுமாறு கொள்வனவுப் பிரிவிற்கு வழங்கப்படுகின்ற ஆவணம் கொள்வனவுக் கட்டளையாகும்.

மேலே தரப்பட்ட கூற்றுக்களுள் சரியான கூற்றுக்களை எவ்விடை காட்டுகின்றது.

1) A, B மாத்திரம்　　2) A,C மாத்திரம்　　3) A,B,C,D மாத்திரம்

4) B,C மாத்திரம்　　5) A,B,C மாத்திரம்

(…….)

29. பின்வரும் தகவல்கள் M1 எனப்படுகின்ற மூலப்பொருள் உருப்படியொன்றுடன் தொடர்புடையதாகும்.

வாரமொன்றின் சராசரிப் பாவனை 80 Kg

வாரமொன்றின் இழிவுப் பாவனை 40 Kg

மறு கட்டளை அளவு 300 Kg

முதன்மைக் காலம் 3 - 5 வாரங்கள்

M1 மூலப்பொருள் உருப்படியின் உச்ச, இழிவு இருப்பு மட்டங்களை முறையாகக் காட்டும் விடை எது?

1) 480 Kg, 240 Kg　　2) 640 Kg, 240 Kg　　3) 640 Kg, 480 Kg

4) 240 Kg, 120 Kg　　5) 780 Kg, 360 Kg

(……..)

30. பொருளாதாரக் கட்டளைத் தொகையினை கணிப்பீடு செய்வதற்கான சமன்பாடும், பொருத்தமான தகவல்களும் தரப்பட்டுள்ளன.

$$EOQ = \sqrt{2XDXCo \div Ch}$$

மறுகட்டளைத் தொகை 300 அலகுகள்

வருடத்திற்கான கட்டளை எண்ணிக்கை 20

கட்டளை ஒன்றின் செலவு ரூபா 15

மேலே தரப்பட்ட சன்பாட்டில் $Ch$ உம் $D$ யும் எவ்வளவு?

1) ரூபா 1, 6 000 அலகுகள் 2) ரூபா 2.50, 3 000 அலகுகள்

3) ரூபா 10, 6 000 அலகுகள் 4) ரூபா 1, 300 அலகுகள்

5) ரூபா 2.50, 6 000 அலகுகள்

(…….)

**இலக்கம் 31 வரையான 50 வினாக்களுக்கு சுருக்கமான விடைகளை புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

31. பின்வரும் பேரேட்டுக் கணக்குகள் எந்த நிதிக்கூற்றுக்களில் கூறுகளில் வெளிப்படுத்தப்படும் என்பதைத் குறிப்பிடுக.

| | **கணக்கு** | **நிதிக் கூற்றின் கூறு** |
|---|---|---|
| 1. | கொடுப்பனவு செய்யப்பட்ட பங்கு இலாபம் | ............................... |
| 2. | சேகரிக்கப்பட்ட பெறுமதி சேர் வரி | ............................... |
| 3. | கொடுப்பனவு செய்யப்பட்ட வட்டி | ............................... |
| 4. | மீள் மதிப்பீட்டு நட்டம் | ............................... |

32. தீசன் வணிகத்தின் 2019 மார்ச் மாதத்திற்கான கொள்வனவு நாட்குறிப்பேடு கீழே தரப்பட்டுள்ளது.

| திகதி | பட்டியல் இலக்கம் | வழங்குனர் | பெறுமதி ரூ.000 | VAT | மொத்தப் பெறுமதி ரூபா 000 |
|---|---|---|---|---|---|
| 03/15 | 12 | சிறில் கம்பனி | 2 000 | 300 | 2 300 |
| 03/22 | 13 | நளின் கம்பனி | 3 000 | 450 | 3 450 |
| 03/31 | | பொதுப்பேரேட்டிற்கு மாற்றியது | 5 000 | 750 | 5 750 |

மார்ச் மாதத்தில் விற்பனை நாட்குறிப்பேட்டிலிருந்து பேரேட்டிற்கு மாற்றியதற்கான பொது நாட்குறிப்பேட்டுப் பதிவுகளை எழுதிக் காட்டுக.

**பொது நாட்குறிப்பேடு**

| திகதி | விபரம் | வரவு ரூ 000 | செலவு ரூ 000 |
|---|---|---|---|
| ................ | ........................................................................................... | ................ | ................ |
| | ........................................................................................... | ................ | ................ |
| | ........................................................................................... | ................ | ................ |
| | ........................................................................................... | ................ | ................ |

33. சுப்பிரி கம்பனியானது தனது வாடிக்கையாளர் ஒருவருக்கு 15.03.2019இல் ரூ. 120 000 கிரயமான சரக்குகளை "விற்பனை செய்க அல்து திருப்பி அனுப்புக" என்ற அடிப்படையில் வழங்கியிருந்தது. 31.03.2019 அன்று நிதியாண்டு முடிவடையும் திகதியில் இச் சரக்குகளில் 40% ஆனவை விற்பனை செய்யப்பட்டுள்ளதாக குறித்த வாடிக்கையாளர் அறிவித்துள்ளார். விற்பனை விலையானது கிரயத்துடன் 20% சேர்த்து தீர்மானிக்கப்படுகின்றது. இக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக பதிவுகள் எவையும் செய்யப்பட்டிருக்கவில்லை. இத் திகதியில் கம்பனியில் உள்ள சரக்குகளின் கிரயம் ரூ. 1 200 000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளன.

அ) 2018.03.31 இல் கம்பனிக்குரித்தான சரக்கிருப்பின் பெறுமதியைக் கணிக்க. ரூ............................

ஆ) இக் கொடுக்கல் வாங்கல்களைச் சீராக்குவதற்கான பொது நாட்குறிப்பேட்டுப் பதிவினை எழுதிக் காட்டுக. (விளம்பல் தேவையில்லை)

**பொது நாட்குறிப்பேடு**

| திகதி | விபரம் | வரவு ரூ | செலவு ரூ |
|---|---|---|---|
| ................ | ........................................................................................... | ................ | ................ |
| | ........................................................................................... | ................ | ................ |
| | ........................................................................................... | ................ | ................ |
| | ........................................................................................... | ................ | ................ |

34. பின்வரும் கணக்கீட்டு வழுக்கள் 31.03.2019இல் முடிவடைந்த வருடத்திற்காக தயாரிக்கப்பட்ட வணிகமொன்றின் பரீட்சை மீதி சமப்படாமையினால் இனங்காணப்பட்டவையாகும்.

1. கொள்வனவு நாளேட்டின் மொத்தக் கூட்டுத் தொகை ரூ. 520 000 கொள்வனவுக் கணக்கில் ரூ. 250 000 எனவும், கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் ரூ. 52 000 எனவும் பதிவுகள் செய்யப்பட்டுள்ளன.
2. பட்டியல் விலையில் 10% வியாபாரக் கழிவு வழங்கப்படும் என்ற நிபந்தனையில் விற்பனை செய்யப்பட்ட சரக்குகளின் பட்டியல் விலை ரூ. 150 000 ஆனது பட்டியல் விலையில் பதிவுகள் செய்யப்பட்டுள்ளது.

31.03.2019 இல் பரீட்சை மீதியின் மொத்தமானது வரவு நிரலிலா, செலவு நிரலிலா குறைவாகக் காணப்பட்டது என்பதையும் அத்தொகையினையும் தருக? ரூ. ……………………… **வரவு/செலவு** (பொருத்தமற்றதை வெட்டிவிடுக).

35. பின்வரும் தகவல்கள் சுதன் வணிகத்தின் 2019.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்குரியதாகும்.

| | | |
|---|---|---|
| 2019.03.31இல் | மொத்த சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு | ரூ. 540 000 |
| | பொறுப்புக்களில் ஏற்பட்ட குறைவு | ரூ. 80 000 |
| | உரிமையாண்மை | ரூ. 1 230 000 |

2019.03.31இல் முடிவடைந்த வருடத்தில் உரிமையாளரின் பற்று ரூ. 60 000 ஆகும். இவ் வருடத்தில் உரிமையாளரின் மூலதனப் பங்களிப்பு எதுவும் இருக்கவில்லை.

1). 2019.03.31இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபம் அல்து நட்டம் ரூ. ………………………..

2). 2019.04.01இல் உள்ளவாறு உரிமையாண்மை ரூ. ………………………..

**பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 36, 37ஆம் வினாக்களுக்கு விடையளிக்க.**

வரையறுக்கப்பட்ட இமயம் கம்பனி 2018.04.01இல் ரூ. 2 000 000 நியாய நிலையான மோட்டார் வாகனம் ஒன்றினைக் குத்தகையில் கொள்வனவு செய்தது. இத் திகதியில் ரூ. 500 000 ஆரம்ப வைப்புப் பணமாக செலுத்தப்பட்டதுடன் மிகுதித் தொகை ரூ. 515 185 வீதம் நான்கு வருடாந்த தவணைக் கட்டணமாக செலுத்தப்படுதல் வேண்டும். முதல் தவணைக் கட்டணம் 31.03.2019இல் செலுத்தப்பட்டது.

தவணைக் கட்டணங்களில் உள்ள வட்டி

| தவணை | ரூ. |
|---|---|
| 1 | 280 125 |
| 2 | 160 930 |
| 3 | 85 485 |
| 4 | 34 200 |

36. 2019.03.31இல் நிதிநிலைமைக் கூற்றில் வெளிப்படுத்தப்படும் பொறுப்புக்கள்
    1) நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் : ரூ ............................................
    2) நடைமுறை பொறுப்பு : ரூ ............................................

37. பின்வருவனவற்றுக்கான பொது நாளேட்டுப் பதிவுகளை எழுதுக.

| திகதி | விபரம் | வரவு ரூ | செலவு ரூ. |
|---|---|---|---|
| | சொத்தாகப் பதிவு செய்தல் | | |
| ............ | ................................................................ | ............. | ............. |
| | ................................................................ | .............. | ............. |
| ............ | ஆரம்ப வைப்புப் பணம் செலுத்துதல் | | |
| | ................................................................ | ............. | ............. |
| | ................................................................ | ............. | ............. |
| ............ | தவணைக் கட்டணம் செலுத்துதல் | | |
| | ................................................................ | ............... | ............. |
| | ................................................................ | ............... | ............. |
| ............. | வட்டியைப் பதிவு செய்தல் | | |
| | ................................................................ | ............... | ............ |
| | ................................................................ | ............... | ............ |

38. 2019.03.31 இல் முடிவடையும் வருடத்தில் வணிகமொன்றின் வருமானங்களும், செலவுகளும் தொடர்பான தகவல்கள் வருமாறு

| | | ரூ. |
|---|---|---|
| 2018.04.01இல் | வாடகை வருமானக் கணக்கின் வரவு மீதி | 36 000 |
| | காப்புறுதிச் செலவுக் கணக்கின் செலவு மீதி | 12 000 |
| 2019.03.31இல் | வாடகை வருமானக் கணக்கின் செலவு மீதி | 24 000 |
| | காப்புறுதிச் செலவுக் கணக்கின் வரவு மீதி | 10 000 |

2019.03.31இல் முடிவடைந்த வருடத்தில் கிடைக்கப்பெற்ற வாடகை வருமானம் ரூ. 248 000 உம் கொடுப்பனவு செய்யப்பட்ட காப்புறுதிச் செலவு ரூ. 60 000 உம் ஆகும்.

பின்வருவனவற்றுக்கு விடையளிக்க.

1. 2019.03.31இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானக் கூற்றில் வெளிப்படுத்தப்படும் வருமானம் ரூ …………………., செலவு ரூ. ……………………..
2. 2019.03.31இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்றில் வாடகை வருமானக் கணக்கின் மீதி ரூ. 24 000 ஆனது …………………………… ஆகவும், காப்புறுதிச் செலவுக் கணக்கின் மீதி ரூ. 10 000 ஆனது …………………………… ஆகவும் வெளிப்படுத்தப்படும்.

39. சன்முகி விளையாட்டுக் கழகத்தின் 2019.03.31இல் முடிவடைந்த வருடத்திற்கான தகவல்கள் வருமாறு

- 2018.04.01இல் மீதிகள் வருமதி சந்தா ரூ. 15 000
  முற்பண சந்தா ரூ. 18 000
  ஆயுள் சந்தா ரூ. 80 000
- இக் கழகத்தின் அங்கத்தவர் ஒருவருக்கான சந்தா ரூ. 1 000 ஆக காணப்படுவதுடன் ஆயுள் அங்கத்தவர் தவிர்ந்த ஏனைய அங்கத்தவர்கள் 80 பேர் ஆகும். 2019.03.31இல் முடிவடைந்த வருடத்தில் மொத்தமாக கிடைக்கப்பெற்ற சந்தா ரூ. 90 000 ஆகக் காணப்படுவதுடன் இத் தொகையில் ரூ. 25 000 எதிர்வரும் வருடத்திற்கான முற்பணமாகும்.
- ஆயுள் சந்தா 2016.04.01இல் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் 10 வருடங்களுக்கான வருமானமாக பதிவழிக்கப்படுகின்றது.

பின்வருவனவற்றைக் காண்க.

1. 2019.03.31இல் முடிவடைந்த வருடத்திற்கான சந்தா வருமானம் ரூ ………………………
2. 2019.03.31இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்றில் சொத்து ரூ. …………………., பொறுப்பு ரூ. …………………….. ஆகும்.

40. வீட்டுத் தளபாடங்களை உற்பத்தி செய்யும் பியதாச வணிகத்தின் 2019.03.31இல் முடிவடைந்த வருடத்திற்கான தகவல்கள் வருமாறு

| | **ரூபா** |
|---|---|
| பலகைகளின் கொள்வனவு (1500 அடிகள்) | 300 000 |
| பயன்படுத்திய நிறப்பூச்சுக்களுக்கான கிரயம் | 50 000 |
| பயன்படுத்திய மணல் கடதாசிகளுக்கான கிரயம் | 10 000 |
| தச்சர்களின் சம்பளம் (ஒரு தளபாடத்திற்கு) | 2 000 |
| உற்பத்தி உதவியாளர் சம்பளம் | 25 000 |
| உற்பத்தி இயந்திரத்தின் கிரயம் | 1 000 000 |

இயந்திரத்தின் பயன்பாடு ஆயுட்காலம் 20 வருடங்கள் ஆகும். இழிவுப் பெறுமதி எதுவுமில்லை.
2018.04.01 இல் மூலப்பொருள் இருப்பு எதுவும் காணப்படவில்லை. என்பதுடன் 2019.03.31 இல் எஞ்சியிருந்த பலகைகளின் இருப்பு 300 அடிகளாகும்.
தொழிற்சாலைக்கான வருடாந்த வாடகைக் கட்டணம் ரூபா 60 000 ஆகும். தளபாடம் ஒன்றை உற்பத்தி செய்வதற்கு 15 அடிப்பலகைகள் பயன்படுத்தப்படுகின்றது.
2019.03.31 இல் முடிவடையும் வருடத்திற்கான மூலக்கிரயம், உற்பத்தி மேந்தலைக் கிரயம் என்பவற்றைக் கணிக்க.

1) மூலக்கிரயம் ரூபா ..................................
2) உற்பத்தி மேந்தலைக் கிரயம் ரூபா ..................................

41. கீழே தரப்பட்டுள்ள வருமானக் கூற்றின் பொழிப்பில் குறிக்கப்பட்டவற்றுக்கான கணக்கீட்டு எண்ணக்கருக்களை எழுதுக.

கணேசன் வியாபாரத்தின் ← A

31.12.2018இல் முடிவடைந்த வருடத்திற்கான ← B

வருமானக் கூற்று ரூ. 000 ← C

| விபரம் | தொகை |
|---|---|
| விற்பனை | xxx |
| (-) விற்பனைக் கிரயம் | (xxx) |
| மொத்த இலாபம் | xxx |
| (-) செலவுகள் | (xxx) |
| தேறிய இலாபம் | xxx |

} D

A ......................................... B ...............................................

C ......................................... D ...............................................

42. கோபி, சிந்து ஆகியோரின் பங்குடமையில் 2018.04.01இல் பைரவி புதிய பங்காளராக இணைந்து கொண்டார். இத் திகதியில் சீராக்கங்களை உள்ளடக்கிய பங்காளர் மூலதனக் கணக்குகள் வருமாறு

பங்காளர் மூலதனக் கணக்கு

| | **கோபி** | **சிந்து** | **பைரவி** | | **கோபி** | **சிந்து** | **பைரவி** |
|---|---|---|---|---|---|---|---|
| நன்மதிப்பு | 300 000 | 200 000 | 100 000 | மீ/கீ/வது | 2 000 000 | 1 500 000 | |
| மீ/கீ.செ | 2 100 000 | 1 500 000 | 1 100 000 | காசு | | | 1 200 000 |
| | | | | நன்மதிப்பு | 400 000 | 200 000 | |
| | 2 400 000 | 1 700 000 | 1 200 000 | | 2 400 000 | 1 700 000 | 1 200 000 |

**பின்வருவனவற்றைக் கணிக்க.**

1) இலாப நட்ட விகிதம் பங்காளர் சேர்தலுக்கு முன் ..........................................., பங்காளர் சேர்தலுக்கு பின் .....................................

2) 2018.04.01 மதிப்பிடப்பட்ட மொதத் நன்மதிப்பு ரூ. ........................................

3) 2018.04.01 இல் பங்காளர் சேர்தலின் பின் பங்குடமை வணிகத்தின் தேறிய சொத்துக்கள் ரூ. ......................................

43. நிதிக் குத்தகையின் கீழ் கொள்வனவு செய்யப்படும் ஆதனத்திற்கான கணக்கு வைப்புச் தொடர்பாக பின்வருவனவற்றுக்கான இரட்டைப் பதிவினை எழுதுக.

அ). தவணைக் கட்டணக் கொடுப்பனவு

..............................................................................................................................................

..............................................................................................................................................

ஆ). நடைமுறையாண்டுக்கான குத்தகை வட்டி

..............................................................................................................................................

..............................................................................................................................................

44. வரையறுக்கப்பட் ருகுணு பொதுக்கம்பனியானது 2018.04.01 இல் பங்கொன்று ரூ. 120 சராசரி விலையில் ரூ. 9 600 000 கூறப்பட்ட மூலதனத்தினைக் கொண்டிருந்தது. இத் திகதியில் ஒவ்வொரு 5 பங்கிற்கும் ஒரு பங்கு வீதம் பங்கொன்று ரூ. 100 விலையில் உரிமைப் பங்குகளை வழங்கியது. 2018.10.01இல் ஒவ்வொரு 8 பங்கிற்கும் ஒரு பங்கு வீதம் பங்கொன்று ரூ. 100 விலையில் வழங்கி நிறுத்தி வைத்திருந்த இலாபங்களை மூலதனமாக்கியது.

அ) உரிமை பங்கு வழங்கல், மூலதமாக்கல் என்பவற்றைப் பதிவு செய்வதற்குத் தேவையான நாட்குறிப்புப்புப் பதிவுகளை எழுதிக்காட்டுக.

| **விபரம்** | **வரவு** | **செலவு** |
|---|---|---|
| 1. உரிமை பங்கு வழங்கல் | | |
| ...................................................................................................................................... | ................ | ................ |
| ...................................................................................................................................... | ................ | ................ |
| 2. ஒதுக்கங்களை மூலதனமாக்கல் | | |
| ...................................................................................................................................... | ................ | ................ |
| ...................................................................................................................................... | ................ | ................ |

ஆ) 2010.03.31 இல் கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனக் கணக்கின் மீதி எவ்வளவு? ரூ. ......................

45. வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றின் 31.03.2019இல் முடிவடைந்த வருடத்திற்கான தகவல்கள் வருமாறு

| | | ரூ. |
|---|---|---|
| விற்பனைக்கான காசு பெறுவனவு | | 125 000 |
| கொள்வனவுக்கான காசு கொடுப்பனவு | | 75 000 |
| செலவுகளுக்கான காசு கொடுப்பனவு | | 15 000 |
| காசு மீதி | 01.04.2018இல் | 30 000 |
| | 31.03.2019இல் | 48 000 |
| 3 மாத திறைசேரி உண்டியல் | | |
| | 01.04.2018இல் | 130 000 |
| | 31.03.2019இல் | இல்லை |

பின்வருவனவற்றைக் காண்க.

1. 31.03.2019இல் முடிவடைந்த வருடத்திற்கான செயற்பாட்டு நடவடிக்கை மூலமான தேறிய காசுப்பாய்சல் எவ்வளவு? ரூ. ..................................
2. 31.03.2019இல் முடிவடைந்த வருடத்திற்கான முதலீட்டு, நிதியீட்ட நடவடிக்கைகள் மூலமான தேறிய காசுப்பாய்சல் எவ்வளவு? ரூ. ..................................

46. வரையறுக்கப்பட்ட நிச்சன் கம்பனி தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | ரூபா 000 |
|---|---|
| 2019.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபம் | 2 000 |
| 2018/2019 இல் வருடத்திற்குச் செலுத்தப்பட்ட பங்கிலாபம் | 500 |
| 2019.03.31 இல் கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் | 6 000 |
| 2018.04.01 இல் நிறுத்தி வைத்த உழைப்புக்கள் | 2 500 |
| 2019.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான வட்டிச்செலவு | 500 |
| 2019.03.31இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானவரிச் செலவு | 500 |

**பின்வருவனவற்றைக் கணிக்க.**

1. வட்டிப் பாதுகாப்பு விகிதம் (தடவைகள்) .....................................................

2. உரிமையின் மீதான விளைவு விகிதம் (2019.03.31இன் உரிமையின் அடிப்படையில்) ....................

47. உற்பத்திக் கம்பனியொன்று மூலப்பொருள் உருப்படியொன்றை விநியோகிப்பதற்கான விலையிடலாக முதல் உள் முதல் வெளி முறை (FIFO) யினை பயன்படுத்தகின்றது. 2019 மார்ச் மாத்திற்கான அம்மூலப்பொருள் உருப்படியொன்றுடன் தொடர்புடைய தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| திகதி | விபரம் | அளவு(அலகுகள்) | அலகொன்றின் விலை (ரூ) |
|---|---|---|---|
| 2019.03.01 | மீதி | 1 000 | 15 |
| 2019.03.12 | கொள்வனவு | 1 000 | 13 |
| 2019.03.15 | வழங்கல் | 1 500 | |
| 2019.03.20 | கொள்வனவு | 1 000 | 8 |
| 2019.03.28 | வழங்கல் | 1 000 | |

**பின்வருவனவற்றைக் காண்க.**

அ) 2019 மார்ச் மாதத்தில் உற்பத்திக்காக வழங்கிய பொருட்களின் கிரயம் ரூ. ..................

ஆ) நிறையிடப்பட்ட சராசரி முறையினை (WAC) பின்பற்றியிருப்பின் 2019 மார்ச் 31 இல் காணப்பட்ட இருப்பின் கிரயம் ரூ .....................

**வினா 48, 49 இற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி விடையளிக்குக.**

உற்பத்திக் கம்பனி ஒன்றின் ஒரு வகையான உற்பத்திப் பொருள் ஒன்றுடன் தொடர்புடைய தகவல்கள் வருமாறு

- மாதமொன்றுக்கு உற்பத்தி செய்யப்படும் பொருளின் அளவு 500 அலகுகள்
- உயர்வான மூலப்பொருள் பாவனை 500 கிலோக்கிராம்
- குறைவான மூலப்பொருள் பாவனை 100 கிலோக்கிராம்
- மூலப்பொள் பாவனைக் காலம் உயர்வானது 4 நாட்கள், குறைவானது 2 நாட்கள்
- ஒரு தடவை மூலப்பொருள் கொள்வனவுக்காக ஏற்படும் செலவு ரூ. 100
- ஒரு அலகு மூலப்பொருளை விநியோகம் செய்யும் வரையும் பாதுகாப்பதற்கான செலவு ரூ. 2
- ஒரு அலகு உற்பத்திப் பொருளுக்கு 2 கிலோக்கிராம் மூலப்பொருள் பயன்படுத்தப்படுகின்றது.
- ஒரு வருடத்தில் கம்பனி 10 மாதங்கள் மட்டும் தொழிற்படுகின்றது.


48. பொருளாதாரக் கட்டளைக் கணியத்தைக் காண்க. ? …………………………………………………

49. பின்வரும் இருப்பு மட்டங்களைக் காண்க.

அ. மறு கட்டளையிடும் மட்டம் :……………………………………………

ஆ. உயர் இருப்பு மட்டம் :…………………………………………………

50. உற்பத்தி வெளியீடு ஒன்றிக்கு வருடமொன்றுக்கு 2000 கிலோக்கிராம் மூலப்பொருள் பயன்படுத்தப்படுவதுடன் ஒரு வருடத்தில் 10 தடவைகள் கொள்வனவு இடம்பெறுகின்றது. அலகொன்றின் பராமரிப்புச் செலவு ரூபா 5 ஆகும். பின்வரும் வரைபடம் இம் மூலப்பொருள் தொடர்பான பொருளாதார கட்டளைத் தொகையை குறிக்கின்றது.




மேலே தரப்பட்டுள்ள வரைபடத்தில் பின்வருவனவற்றை குறித்துக் காட்டுக.

1. பொருளாதாரக் கட்டளைக் கணியம்
2. கட்டளைச் செலவு
3. பராமரிப்புச் செலவு
4. மொத்தச் செலவு